Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 396/22

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : தங்கமணி | Father/Husband Name | : சுபாஸ் என்ற வாசு |
| Age | : | Calling | : |
| Date | : 06.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 06 day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் கொட்டாம்பட்டியில் குடியிருந்து டெக்னிசியன் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 27.10.2019 ம் தேதி இரவு 08.30 மணயளவில் கொட்டாம்பட்டி எஸ்சி ஹாஸ்டல் ஆலமரம் அருகே நானும், ராஜ்குமார், கண்ணன், கோடிஸ்வரன் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது இன்டிகா கார் வேகமாக வந்து அசா1 யை உரச வந்தது. அசா1 யார் என்று காரில் இருந்தவரை கேட்டார். எதிரி கணேசன் காரிலிருந்து இறங்கி வந்து கண்ணனை, கண்ணத்தில் அரைந்தார். உடனே அசா1 எதிரி கணேசனை பார்த்து மாமா நீங்களா என்று தெரியாது என்று சொன்னார், எதிரி கணேசன் அசிங்கமாக பேசி மீண்டும் அடித்தார். எதிரி கணேசன் இங்கேயே இருங்கடா என்று சொல்லி அங்கிருந்து சென்றார்.

பின்னர் 3/4 மணி நேரம் கழித்து அதே வண்டியில் எதிரி கணேசன், செல்வம், ஆறுமுகம், கண்ணன் ஆகியோர்கள் அங்கு வந்தார்கள். காரிலிருந்து இறங்கி எதிரிகள் கண்ணனை அடித்தார்கள். எதிரிகள் செல்வம், ஆறுமுகம், கண்ணன் ஆகியோர்கள் அசா1 யை கையால் அடித்தார்கள், எதிரி கணேசன் அசா1 யை கட்டையால் தலையில் அடித்தார், அதில் அசா1 ற்கு ரத்தகாயம் ஏற்பட்டது. தடுக்க சென்ற

எங்களையும் கீழே தள்ளிவிட்டார்கள். எதிரிகள் அசா1 யை பார்த்து இன்று தப்பித்துவிட்டாய், உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று சொல்லி சென்றுவிட்டார்கள். அதன்பின்னர் 108 ஆம்புலன்ஸ்ற்கு தகவல் சொன்னோம். 108 ஆம்புலன்ஸ்ல் ராஜ்குமார் அசா1 யை மேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் எனது இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனையில் அசா1 யை சிகிச்சை அனுமதித்தோம், அவருக்கு தலையில் தையல் போட்டார்கள். நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

நானும், அசா1, அசா2 நண்பர்கள் என்றால் சரிதான். எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்றையதினமும் நானும், அசா1, அசா2 ம் மது அருந்தியிருந்தோம் என்றால் இல்லை. சம்பவம் நடந்த போது அசா1 கண்ணன் உடன் இருந்தேனா என்றால் இல்லை. சம்பவத்தின்போது எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. வழக்காக நானும், எனது நண்பர்களும் எஸ்சி ஹாஸ்டல் அருகே ஒன்றாக சேர்ந்து மது அருந்துவோம் என்றால் சரியல்ல. எஸ்சி ஹாஸ்டல் அருகே குடியிருப்புகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எனக்கு வீடு இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக கொட்டாம்பட்டி போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, போனிலும், நேரிலும் விசாரித்தார்கள். எத்தனை நாட்கள் கழித்து என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து 2 அல்லது 3 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். என்னை தவிர வேறு யாரை போலீசார் விசாரித்தார்கள்

என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தபோது எத்தனை மணி இருக்கும் என்றால் நேரம் சரியாக தெரியவில்லை மதியத்திற்கு மேல் விசாரித்தார்கள். அசா1 யை போலீசார் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் அவர் மருத்துவமனையில் இருந்ததனால் எனக்கு தெரியாது, நான் அசா1 யை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேனா என்றால் பட்டியல் சாட்சி ராஜ்குமார் அழைத்து சென்றார், எந்த மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் கொட்டாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். நான் கொட்டாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். அங்கு எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் 1/4 லிருந்து 1/2 மணி நேரம் இருக்கும், முதலுதவி பெற்றபின்பு சென்றேன். அப்போது அசா1 சுயநினைவில் இருந்தாரா அல்லது மயக்கநிலையில் இருந்தாரா என்றால் மயக்க நிலையில் இருந்தார்.

நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது, அசா1 எனது நண்பர் என்பதால் எங்களுக்கிடையே போதையினால் ஏற்பட்ட சண்டையினால் அசா1 ற்கு காயமானது, ஆனால் எதிரிகளால் ஏற்பட்டது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும், எனது நண்பர்களும் முழு மதுபோதையில் இருந்தோம், வழக்கிற்காக நான் குடிக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 396/22

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : கோடிஸ்வரன் | Father/Husband Name | : பஞ்சாச்சரம் |
| Age | : | Calling | : |
| Date | : 06.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 06 day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் கொட்டாம்பட்டியில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 27.10.2019 ம் தேதி இரவு 08.30 மணியளவில் கொட்டாம்பட்டி எஸ்சி ஹாஸ்டல் அருகே நானும்,

ராஜ்குமார், கண்ணன், தங்கமணி ஆகியோர்கள் நின்று கொண்டு பேசிக்கெண்டிருந்தபோது இன்டிகா கார் வேகமாக எங்களை உரசுவதுபோல் வந்தது, அதற்கு அசா1 கண்ணன் ஏன் இவ்வளவு வேகமாக வருகிறீர்கள் என்று கேட்டார், அதற்கு காரிலிருந்து இறங்கிய எதிரி கணேசன் அசா1 கண்ணனை கண்ணத்தில் அரைந்தார். அதற்கு கண்ணன் கணேசனை பார்த்து தாங்கள் என்று தெரியாது மாமா, மண்ணித்துக்கொள்ளுங்கள் என்று கேட்டார், அதற்கு எதிரி கணேசன் போய்ட்டு வருவேன் என்று சொல்லிவிட்டு சென்றார்.

பின்னர் 10 நிமிடம் கழித்து அதே காரில் ஆஜர் எதிரிகள் அனைவரும் வந்து எதிரி கணேசன், அசா1யை கட்டையால் தலையால் அடித்தார், அவருக்கு ரத்தகாயம் ஏற்பட்டது. மற்ற எதிரிகள் கையால் அசா1யை மாறி, மாறி அடித்தார்கள், நான் விலக்கிவிட்டேன். அதன்பின்னர் அசா1யை 108 ஆம்புலன்ஸ் மூலம் கொட்டாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்று அங்கிருந்து மேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு அசா1யை சிகிச்சைக்கு அனுமதித்துவிட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். இதுசம்மந்தமாக அசா1 கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் புகார் வாக்குமூலம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தாகள், நான் நடந்த விவரத்தை சொன்னேன்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

அசா1 கண்ணன் எனது நண்பர் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கும் கொட்டாம்பட்டி காவல் நிலையத்திற்கும் சுமார் 1 கிமீ தூரம் இருக்கும் என்றால் 1/2 கிமீ தூரம் இருக்கும். நானும், அசா1, பட்டியல் சாட்சி 4ம் ஒன்றாக மது அருந்தும் பழக்கம் உடையவர்கள் என்றால்

சரிதான். அதேபோல் சம்பவம் நடந்த அன்றையதினமும் நானும், அசா1ம் மற்ற நண்பர்களும் மது அருந்தியிருந்தோம் என்றால் நான் அருந்தியிருந்தேன். மற்ற நண்பர்களும் மது அருந்தியிருந்தார்கள் என்றால் நானும், தங்கமணி மற்றும் ராஜ்குமாரும் மது அருந்தியிருந்தோம். பொதுவாக சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் எஸ்சி ஹாஸ்டல் அருகே தான் நானும், எனது நண்பர்களும் மது அருந்துவோம் என்றால் சரியல்ல, எஸ்சி ஹாஸ்டல் அருகே தான் எனது வீடு உள்ளது. எஸ்சி ஹாஸ்டலை சுற்றி குடியிருப்புகள் உள்ளது என்றால் சரிதான். என்னை கொட்டாம்பட்டி போலீசார் தனிப்பட்ட முறையில் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 396/22

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : கண்ணன் | Father/Husband Name | : அய்யனார் |
| Age | : | Calling | : |
| Date | : 06.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 06 day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் கொட்டாம்பட்டியில் குடியிருந்து கொண்டு டாடா ஏஸ் வைத்து வாடகைக்கு ஒட்டி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 27.10.2019 ம் தேதி இரவு சுமார் 08.30 மணியளவில் கொட்டாம்பட்டியில் SC ஹா'ஸ்டல் ஆலமரத்து அருகில் நானும், ராஜ்குமார், தங்க மணி, கோடிஸ்வரன் ஆகியோர்கள் பேசிக்கொண்டிருந்தபோது அங்கு இன்டிகா கார் எங்களை

உரசுவதுபோல் வந்தது. நான் உடனே காரில் இருந்தவர்களை பார்த்து யார் என்று கேட்டேன், காரை ஓட்டி வந்த எதிரி கணேசன் காரிலிருந்து இறங்கி வந்து எனது கண்ணத்தில் அடித்தார். நான் உடனே நீங்கள் என்று தெரியாது மாமா, மண்ணித்துக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். உடனே எதிரி கணேசன் காரை எடுத்துக்கொண்டு சென்று 10 நிமிடம் கழித்து மற்ற எதிரிகளான ஆறுமுகம், செல்வம், கண்ணன் ஆகியோர்களை அழைத்து வந்தார். அதில் கணேசன் எனது தலையில் கட்டையால் அடித்தார், ரத்தம் வந்தது. ஆறுமுகம், கண்ணன், செல்வம் ஆகியோர்கள் கையால் மாறி, மாறி முதுகு, கண்ணன், முகத்தில் அடித்தார்கள். எதிரிகளில் ஒருவர் எனது முதுகில் கடித்தார், அதை பார்த்து அருகில் இருந்த ராஜ் குமார், தங்க மணி, கோடிஸ்வரன் ஆகியோர்கள் விலக்கி விட்டு ஆம்புலன்ஸ்க்கு அழைத்தார்கள். எதிரிகள் என்னை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள். 108 ஆம்புலன்ஸ் மூலம் மேலூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். மறுநாள் கொட்டாம்பட்டி காவல் நிலையத்திலிருந்து போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த சம்பவத்தை வாக்குமூலமாக கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் வாக்குமூலம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது )**, நான் மேலூர் அரசு மருத்துவமனையில் 8 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். எனது தலையில் ஏற்பட்ட காயத்திற்கு 8 தையல் போடப்பட்டது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 6ம் வகுப்பு வரை

படித்துள்ளேன். சம்பவத்திற்கு பின்னர் நான் மயக்க நிலையில் இருந்தேனா என்றால் ஆம். நான் சொன்னதுபோல் உடனடியாக கொட்டாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் கொட்டாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்ற போது சுயநினைவில் இருந்தேனா அல்லது மயக்கநிலையில் இருந்தேனா என்றால் சுயநினைவில்தான் இருந்தேன். அங்கு என்னை மருத்துவர் காயம் குறித்தும், சம்பவத்தை குறித்தும் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அப்போது கூறிய விவரத்தைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் டாக்டர் இல்லை நர்ஸ்தான் இருந்தார்கள். அங்கு எவ்வளவு நேரம் சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் 10 நிமிடம். அதன்பின்னர் என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் மேலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். கொட்டாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் எனக்கு முதலதவி சிகிச்சை அளித்து அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான். மேலூர் அரசு மருத்துவமனைக்கு வந்தபோது சுயநினைவில் இருந்தேன் என்றால் சரிதான். மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையின்போது மருத்துவர் சம்பவம் குறித்து சொன்னேனா என்றால் அதுகுறித்து அவர் எதுவும் கேட்கவில்லை. மேலூர் அரசு மருத்துவமனைக்கு நான் சென்றபோது என்னை எதுவும் கேட்காமல் உள்நோயாளியாக சேர்த்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

2) சம்பவம் நடந்த இடத்திற்கும் கொட்டாம்பட்டி காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1 கிமீ இருக்கும், சம்பவ இடத்திற்கும், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் காவல் நிலையத்திலிருந்து 100 மீட்டர் தூரம் இருக்கும். ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு காவல் நிலையத்தை தாண்டி

தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என்றால் இரவு 08.30 மணிக்கு. நான் ஆரம்ப சுகாதார நிலையம் சென்ற போது மணி 08.40 இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தின்போது நானும், பட்டியல் சாட்சி 2 முதல் 4 வரையிலானவர்கள் மது போதையில் இருந்தீர்கள் என்றால் நான் மட்டும் மது அருந்தியிருந்தேன், மற்றவர்கள் மது அருந்தவில்லை. அன்று நான் முழு மதுபோதையில் இருந்தேன் என்றால் சரிதான். நானும், எனது நண்பர்கள் முழு மதுபோதையில் இருந்தோம், வழக்கிற்காக நான் மட்டும் மதுபோதையில் இருந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் எஸ்சி ஹாஸ்டல் அருகே குடியிருப்புகள் உள்ளது என்றால் சரிதான். என்னை மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றார் என்றால் சாட்சி கோடிஸ்வரன் அழைத்து சென்றார். மேலூர் அரசு மருத்துவமனைக்கு என்னுடன் யார் வந்தார்கள் என்றால் எனது மனைவி மட்டும் உடன் வந்தார். எனது மனைவியான கலாராணி என்னை மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தார் என்றால் சரிதான். போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் மறுநாள் விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்து எழுதாத வெள்ளைதாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல, நான் சொன்னதைதான் எழுதி கையொப்பம் பெற்றார்கள்.

4) நான் சொன்ன விவரத்தைதான் போலீசார் எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். போலீசாரிடம் சொன்ன விவரத்தைதான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், எனக்கு எழுத, படிக்க தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னை எவ்வளவு நேரம் விசாரித்தார்கள், என்னுடன் யார், யார்

இருந்தார்கள் என்றால் 1/2 மணி நேரம் விசாரித்தார்கள், என்னுடன் எனது தாயார் அம்மாபொண்ணு மற்றும் மனைவி கலாராணி உடன் இருந்தார். அதன்பின்னர் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, நான் முழு மதுபோதையில் 1ம் எதிரி ஓட்டி வந்த காரை மறித்து தகராறு செய்தேன், அவர் தனது வீட்டிற்கு சென்றுவிட்டார், அதன்பின்னர் எனக்கும், வழக்கின் 2 முதல் 4 பட்டியல் சாட்சிகளுடன் சண்டையினால் காயம் ஏற்பட்டது, அதை எதிரிகளால் ஏற்பட்ட காயம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 2 முதல் 4 பட்டியல் சாட்சிகள் அனைவரும் எனது நண்பர்கள் என்றால் சரிதான். எனது புகாரில் யார், யார் சம்பவத்தை விலக்கிவிட்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தபோது ரத்தம்படிந்த சண்டை, சம்பவத்தின்போது பயன்படுத்தப்பட்ட கட்டை ஆகியவற்றை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ரத்தம் படிந்த சண்டையை மட்டும் ஒப்படைத்தேன்.

5) இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் அனைவரும் எனது உறவினர்கள் என்றால் சரியல்ல. நான்சொன்னதுபோல், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, எனக்கு ஏற்பட்ட காய்ம் என்னால் ஏற்பட்டது என்றால் சரியல்ல, மதுபோதையில் நான் எதிரியின் வண்டிக்கு முன்னால் விழுந்த காயம் என்றால் சரியல்ல. நானும், எனது நண்பர்களும் இரவு நேரங்களில் எப்போதும் அந்த ரோட்டில், ரேட்டை மறித்து மது அருந்துவோம் என்றால் சரியல்ல.